1979 மார்ச் 21]

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, இது கோவை மருததுவ மனையைப் பற்றிய கேள்வி. மாண்புமிகு உறுப்பினர் எந்த மருத்துவ மனையில் திருட்டுப்போனது பற்றிக் கேட்கிறார் என்று தெரியவில்லை. கோவை மருத்துவ மனையில் அப்படி திருட்டுப்போனதாக வந்துள்ள விவரத்தில் இல்லை.

திரு. ஆர். மணிமாறன் : பேரவைத் தலைவா அவர்களே, அந்தத் துறைத் தலைவர்கள் தங்களுடைய அதிகாரத்தைப் பயன்படுத்தி எவ்வளவு ரூபாய்க்கு மருந்துகள் வாங்க அரசு அனுமதி அளித்து இருக்கிறது. அப்படி வாங்குகிற மருந்துகள், எத்தனை நாளைக்கு எத்தனை நோயாளிகளுக்கு தரப்பட்டு வருகிறது, ஆஸ்துமா போன்ற நோயாளிகளுக்கு வாரத்திற்கு ஒரு முறை அல்லது இரண்டு முறை தொடர்ந்து மருந்து கொடுக்க அரசு வழிவகை செய்யுமா ?

மாண்புமிகு திரு. திருச்சி. ஆர். சௌந்திரராஜன் : பேரவைத் தலைவர் அவர்களே, துறைத் தலைவர்கள் ரூ. 20,000 மதிப்புள்ள மருந்துகள் வாங்குவதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளனர். அரசு மருத்துவ மனைகளில் தரமான மருந்துகள் வாங்கும் நோக்கத்துடன் மத்திய, மாநில அரசு நிறுவனங்களில் இருந்து நேரடியாக ஒப்பந்தப்புள்ளி இல்லாமல் மருந்துகள் வாங்க அனுமதிக்கப்பட்டுள்ளது. மருத்துவ மனைகளில் நோயாளிகளைச் சோதித்த மருத்துவர்களின் அறிவுரையின் அடிப்படையில் மருந்துகள் வழங்கப்படுகின்றன. வெளிநோயாளிகளுக்கு இரண்டு நாளைக்கு சேர்ந்தார்போல் மருந்துகள் வழங்கப்படுகின்றன. அதற்குப் பிறகு அவர்களுடைய உடல் நிலைக்கு ஒத்த தேவைக்கு ஏற்ப மருந்துகள் வழங்கப்படுகின்றன. ஆஸ்துமா நோயாளிகளுக்கு ஒரு வாரத்திற்கு மருந்து கொடுக்கப்படுமா என்று கேட்டார்கள். ஆஸ்துமா நோய்க்கு வழங்கப்படுகின்ற மருந்துகளை சில நேரங்களில் அதிகமாக அந்த நோயாளிகள் சாப்பிட்டு விடுவார்களானால் அவர்களுடைய உயிருக்கே அது ஆபத்தை விளைவிக்கும் தன்மை பெற்ற மருந்தாகும். ஆகவே, ஒரு வாரத்திற்கு வழங்குவது கொஞ்சம் கடினம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சேலம் மாவட்ட காவல்துறையினர் குடியிருப்புகள்.

*வினா எண். 500— திரு. சேலம் மு. ஆறுமுகம்: மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சேலம மாவட்டத்தில் காவல் துறையினருக்கு புதிய குடியிருப்புகள் ஏற்படுத்தும் உத்தேசம் இந்த அரசுக்கு உண்டா?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன?

(இ) சேலம் நகரில் ஆயுதப்படை பிரிவினர் வசிக்கும் வீடுகள் மிகவும் பழுதடைந்த நிலையில் இருப்பதும், பல வீடுகள் குடியிருக்க முடியாத நிலையில் வருடக் கணக்கில் காலியாக இருப்பதும் இந்த அரசின் கவனத்திற்கு வந்ததா?

(ஈ) ஆம் எனில் அது சம்பந்தமாக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் என்ன?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: (அ) ஆம்.

(ஆ) சேலம் மாவட்டம், கன்னங்குறிச்சி, பள்ளிப்பாளையம், முதலிய இடங்களில் குடியிருப்புகள் கட்டுவதற்கான நிலம் ஆர்ஜிதப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

(இ) இல்லை.

(ஈ) கேள்விக்கு இடமில்லை.

திரு. சேலம் மு. ஆறுமுகம் : தலைவரவர்களே, சேலம் நகர் குமாரப்பட்டி, சேலம் பென்சன் லைன் ஆகிய இடங்களில் ஆயுதப்படையினருக்குக் கட்டிக்கொடுத்த வீடுகள் வசிக்க முடியாத அளவுக்கு பழுதடைந்திருப்பதால் காலியாக இருக்கின்றன. ஆகவே, அரசு நிலங்களைப் பயன்படுத்தி, வீட்டு வசதி வாரியத்தின் மூலமாக பல மாடிக் கட்டிடங்களைக் கட்ட உத்தேசம் உண்டா? அவர்கள் தனியார் வீடுகளில் குடியிருப்பதன் மூலம் அவர்களுக்கு சலுகை அளிப்பது, அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்வது போன்ற தவறுகள் நடைபெற இடமளிப்பதால் காவல் துறையினருக்கு அரசு வீட்டுவசதி செய்து கொடுக்குமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே ஆயுதப் படையினருக்கு ஒரு ரிசர்வ் இன்ஸ்பெக்டர், 7 ரிசர்வ் சப் இன்ஸ்பெக்டர், 7 உதவி ரிசர்வ் சப் இன்ஸ்பெக்டர், 23 தலைமை காவலர், 350 காவலர் ஆகியோருக்கு குடியிருப்பு இருக்கிறது. அவை வசிக்கக்கூடிய நிலையில் இருக்கின்றன. எல்லாக் குடியிருப்புகளிலும் ஆயுதப்படைப் பிரிவினர் குடியிருக்கிறார்கள். காலியாக குடியிருப்பு எதுவும் இல்லை. அரசாங்க நிலம் குடியிருப்பு கட்ட வசதியாக இருக்கிறது என்று சொன்னார்கள்; அது பற்றி அரசு கவனிக்கும். காவல் துறையைச் சேர்ந்த எல்லோருக்கும் வீடு கட்டித் தரும் அக்கறை இந்த அரசுக்கு இருக்கிறது. அவர்கள் தனியார் குடியிருப்புகளில் கூடியவரையில் தங்காமல் இருக்க எல்லா முயற்சிகளும் மேற்கொள்ளப்படும்.

[979 மார்ச் 21]

திரு. சேலம் மு. ஆறுமுகம்: தலைவரவர்களே, சேலம் சங்ககிரி, சேலம் பென்சன் லைன், டவுன் டி.எஸ்.பி.பங்காளாவுக்கு அருகாமையில் உள்ள வீடுகள் பாழடைந்து இருப்பதால் ஒருவர் கூட அங்கே குடியிருக்கவில்லை. அப்படிப்பட்ட தகவலை ஏன் அரசுக்கு கொடுக்கவில்லை என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டுவந்த தற்காக நன்றி.

அரசு அதிகாரிகள் இடமாற்றம்.

*வினா எண். 501—திரு ரா. கிருஷ்ணன்: மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப் பாரா: அரசு அதிகாரிகள் மாற்றுதல் செய்யப்பட்டுப் போகும் போது ஊழியர்கள் விருந்துவைக்கும் முறையை தடை செய்ய அரசு உத்தரவு போடப் படுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன். தற்போது, அத்த கைய உத்தேசம் இல்லை.

திரு. ரா. கிருஷ்ணன்: தலைவரவர்களே, அரசு அதிகாரிகள் மாற்றுதல் ஆகி போகும்போதும், இன்னொரு அதிகாரி அந்த அலுவலகத்திற்கு வருகிறபோதும் அவர்களுக்கு விருந்துகள் வைக்க சில இடங்களில் கட்டாய வசூல் செய்யப்படுகிறது. அந்த அதிகாரிகளின் நல்லெண்ணத்தைப்பெற்று, அவர்களிடம் சலுகைகள் பெறவேண்டுமென்பதற்காக இப்படிச் செய்யப் படுவதாகச் சொல்லப்படுகிறது. இது மனம் உவந்து செய்யப் படுவதாகச் சொல்லலாம். பொதுவாக வரதட்சணை வாங்கு வதும் மனம் உவந்து அளிக்கப்படுவதுதான் என்று ஏற்கனவே சொல்லப்பட்டிருக்கிறது. அதைத் தடுக்க தற்போது சட்டம் கூட வந்திருக்கிறது. இதை மனதிற்கொண்டு, விருந்து வைக்கப்படுவதைத் தடுக்க உத்தரவு பிறப்பிக்கப்படுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, இதுபற்றி அரசு விரிவாக ஆராய்ந்தது. ஒரு அதிகாரி மாற்றலாகி வெளியூருக்குப் போகும்போது, அங்கே பணி யாற்றுகின்ற ஊழியர்கள் தாங்களே மனம் உவந்து, முன்